பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 11 வியாழக்கிழமை (25-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 60

# தமிழக மீனவர்கள் 64பேரை கடற்படை பிடித்து சென்றது!

## இராமேஸ்வரம் பகுதியில் பதற்றம்

லண்டன், ஜனவரி 25

**இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் கடற் தொழிலுக்குச் சென்ற தமிழக மீனவர்களில் 67 பேரை ஸ்ரீலங்கா கடற் படையினர் பிடித்துச் சென்றிருப்பதை அடுத்து இராமேஸ்வரம் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.**

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் கடலுக்குச் சென்ற சுமார் அறுநூறு மீன்பிடிப் படகுகளில் இருபது படகுகள் நேற்றுக் காலை 10.30 மணிவரை கரைக்குத் திரும்பவில்லை என்றும்—

அதன் பின்னர் அந்த 20 படகுகளில் நான்கு படகுகள் மட்டும் கரைக்கு வந்து சேர்ந்தன என்றும் —

எஞ்சிய 16 படகுகளிலும் இருந்த 67 தமிழக மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படை பிடித்துச் சென்றது பற்றிய தகவலை இந்த நான்கு படகுகளிலும் வந்த மீனவர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காணாமற்போன ஹெலியை தேடும் முயற்சியில் அரச படைகள் தீவிரம்

கொழும்பு, ஜன. 25

கடந்த திங்களன்று வடக்கு கடற்பகுதியில் காணாமல் போன ஸ்ரீலங்கா விமானப் படையின் 'எம். ஐ. 17' ரக ஹெலிக்கொப்டரைத் தேடும் முயற்சியில் ஸ்ரீலங்கா விமானப்படையினரும், கடற்படையினரும் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாகவும் —

ஆனால் அம்முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை என்றும்—

கொழும்பில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹெலிக்கொப்டர் காணாமற்போனதாக நம்பப்படும் பகுதியில் ஏதோ வெடிக்கும் சத்தம் ஒன்று கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் புகை மண்டலம் காணப்பட்டதாகவும் பருத்தித்துறை வாசிகள் தெரிவித்ததாக அப்பகுதியில் நிவாரணப்பணியில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் பெண் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இத்தகவலை 'வெரித்தாஸ்' வானொலி வெளியிட்டுள்ளது.

ஹெலிக்கொப்டர் காணாமற்போனமை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விசாரிக்கப்பட்டபோதும்—

அவர்கள் இதுவரை பதில் எதனையும் தரவில்லை என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கடற்புலிகளின் அணி ஒன்று கடலில் படகிலிருந்து ஹெலிக்கொப்டர் மீது சுட்டுள்ளதென்று இராணுவ வட்டாரங்கள் நம்புகின்றன.

ஆனால் அத்தகைய படகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பாடசாலைகளில் மேலதிகமாக கொட்டகைகள்

### பிளாஸ்ரிக் கூரைகளை கெயர் வழங்கும்

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பதினேழு பாடசாலைகளில் மேலதிக கொட்டகைகளை அமைப்பதற்குக் கூரைத்துணிகளை வழங்குவதற்கு அகில உலக கெயர் நிறுவனம் முன்வந்துள்ளது.

கூரைக்கும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்ரிக் துணிகளை கெயர் நிறுவனம் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கும்

கிளிநொச்சி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்தில் இது குறித்து அறிவிக்கப்பட்டது.

ஆலங்கேணிப் பகுதியில் அடுத்த மாதம் தொடக்கம் மருந்தகம் [டிஸ்பென்சரி] ஒன்றை நிறுவவும் முடிவாகியது.

இதற்குத் தேவையான கட்டடத்தை, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுகாதாரப் பகுதிக்கு வழங்கும்.

உழைப்பாளரை இழந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்பிக்க உள்ளதாகவும் மாகாட்டில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவ்வப்பகுதி பிரதேச செயலர்கள் ஊடாக உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களின் விவரங்களைத் திரட்டுவது எனக் கூட்டத்தில் முடிவாகியது.

இடம்பெயர்ந்தோர் நலன்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### பங்கீட்டு அட்டை மீள் பரிசிலனை

## "இ" அட்டையை "உ" ஆக மாற்றுவதுநிறுத்தப்பட்டது

சாவகச்சேரி, ஜன. 25

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பங்கீட்டு மீளாய்வில் 'இ' அட்டையை 'உ' அட்டையாக மாற்றும் நடைமுறை தளர்த்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கிராம சேவகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் பங்கீட்டு அட்டைகளை மறுபரிசிலனை செய்யும் வேலைகள் கடந்த திங்கட்கிழமை முதல் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் ஆரம்பமாகின.

இந்த மறுபரிசிலனையின் போது—

வெளிநாட்டில் உள்ள [illegible] வலிகாமத்தில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமலையில் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 25

திருகோணமலை நகரசபை எல்லைக்குள்— படையினரின் கூடுதல் பாதுகாப்பில் உள்ள — அன்புவழிபுரம் பகுதியில் கடந்த ஞாயிறன்று பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து தேடுதல் நடத்திய சமயம் அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார்.

(உ-3)

### கிழக்கில் சிலிண்டர் குண்டு

மட்டக்களப்பு வாழைச்சேனை கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு அருகில் நேற்று முன்தினம உரிமை கோராமல் விடப்பட்டிருந்த மாட்டு வண்டி ஒன்றில் காணப்பட்ட சிலிண்டர் குண்டு ஒன்றைப் படையினர் தூரத்தில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து வெடிக்க வைத்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பிரதேசத்தில் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-7)

### நேற்றும் ஷெல் தாக்கு!

கரணவாய், ஜன. 25

பலாலி படை முகாமிலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் தொண்டமானாறு, கெருடாவில், காட்டுப்புலம், மயிலியதனைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(உ-80-173)

### ரணிலின் ஆதரவை கோர அரசு முடிவு

கொழும்பு, ஜன. 25

அரசின் தீர்வுத்திட்ட சட்ட வரைவு குறித்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி அதற்கு அவரினதும் ஐ. தே கவினதும் ஆதரவைக் கோருமாறு தம்மை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்திருப்பதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று கொழும்பில் தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து ரணில் விக்கிரமசிங்காவுடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகவும்.—

விரைவில் தாம் அவருடன் பேசவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

(உ-3-6)

### மருத்துவ பீட பரீட்சைகள் ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஜன. 25

எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற வசதியாக வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் பரீட்சை நிலையம் அமைக்கப்படவுள்ளதால், பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### காடுகளில் மக்கள் தஞ்சம்

சாவகச்சேரி, ஜன. 2ҫ

கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தொடர்ந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மேற்கொண்டுவரும் அகோர ஷெல் தாக்குதல்களினால் பல நூற்றுக்கானக்காண அப்பாவித தமிழ் மக்கள் இடம்பொர்ந்து காடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

(உ-3)

### தீர்வுத் திட்டம்: பிரதமர் ராவ் ஆதரவாம்!

கொழும்பு, ஜன. 25

இனப்பிரச்சனைக்கு அமைதித் தீர்வு காண ஸ்ரீலங்கா அரசு எடுத்துள்ள முயற்சிகளை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வரவேற்றுள்ளாராம்.

அண்மையில் இந்தியாவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை தாம் மேற்கொண்ட சமயம் இந்தியப் பிரதமர் ராவைச் சந்தித்ததாகவும் —

அவ்வேளை பிரதமர் இக்கருத்தை வெளியிட்டதாகவும் அமைச்சர் கிங்ஸிலி விக்கிரமரத்ன நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(உ)

### வடமராட்சியில் கடற்படை ரோந்து

தாளையடி, ஜன. 25

வடமராட்சி கிழக்குக் கடலில் கடற்படை விசைப்படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கரையிலிருந்து மிகத்தூர ஆழ்கடல் பகுதியில் கடற்படையின் விசைப் படகுகள் ரோந்து சென்று வருகின்றன.

இதனால் இப்பகுதியில் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்துள்ளது.

(உ-144)

### கிழக்கு நடவடிக்கை நிறுத்தம்!

கொழும்பு, ஜன. 25

கிழக்கில் கடந்த வாரம் படையினர் பெரும் எடுப்பில் ஆரம்பித்த "சூரிய ஒளிக்கற்றை" இராணுவ நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

(உ-6)

## தவறிவிட்டது

24. 01. 96 அன்று பருத்தித்துறையில் இருந்து சாவகச்சேரிக்கு த1. 6112 இலக்க மினிபஸ்ஸில் எனது பெறுமதி மிக்க நகைகள் அடங்கிய பை தவறிவிட்டது. எடுத்தவர்கள் கிருஷ்ணமூர்த்தி கலைவாணி, புகையிரத நிலைய விடுதி, மடத்தடி, சங்கத்தானை எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(40012)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08 – 07 – 1955

உதிர்வு: 24 – 01 – 1988

### திருமதி காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

(விஞ்ஞான ஆசிரியை, ம / காக்கையன்குளம் மகா வித்தியாலயம்)

திதி: 25 01 – 1996

(வியாழன்)

ஆண்டு எட்டு மறைந்ததம்மா!
ஆறுமோ எம்மனம் ஆறாதம்மா!

தங்கள் பிரிவால் துயருறும்,

**கணவன், மகன் கோகுலன், மகள்மார் கஸ்தூரி, புராதனி, பெற்றோர், சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், மற்றும் உன் அன்பால் ஈர்க்கப்பட்ட உறவினர்கள், நண்பர்கள்**

நிரந்தர முகவரி:
ஸ்ரீசாலினி,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

தற்காலிக முகவரி:
வயிரவர் கோவிலடி,
கைதடி-நுணாவில் வீதி,
சாவகச்சேரி.


(40236)

அமரர்

## சரவணமுத்து சேனாதிராஜா

அவர்கள் அமரத்துவம் எய்திய

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 - 04 - 1910

உதிர்வு: 15 - 01 - 1986

திதி: 25 - 01 - 1996

அறிவூட்டி வாழும் அறமுணர்த்தி தெய்வ
நெறி நம்பி வாழுகின்ற வழிகாட்டி - செறிதூய
அன்பினால் எம்மைச் சேர்த்திருந்த நினைவுகள்–
ஐயா
என்றும் உயிரினிலே கலந்திருக்கும் கண்டீர்:

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''சத்திய வாசா'',
இமையாணன்,
உடுப்பிட்டி.

(40095)

## செய்முறை பரீட்சைக்கு ஏற்பாடு

ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கான மனையியல், சங்கீதம் ஆகிய பாடங்களின் செய்முறைப் பரீட்சைகளை கிளிநொச்சியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தருமரட்ணம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறும் திகதி குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும்—

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ள மாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ-3)

## இணைந்து செயற்பட முடிவு

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க ஈ.பி. ஆர். எல். எவ். முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் செயற்படும் ஈ. பி. டி. பி., த. சித்தார்த்தன் தலைமையில் செயற்படும் புளொட், எம். கே. சிவாஜிலிங்கத்தின் தலைமையில் செயற்படும் ரெலோ ஆகிய ஆயுதக் குழுக்களே பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தன.

இப்போது சுரேஷ் பிரேமச்சந்திரனின் தலைமையில் செயற்படும் ஈ. பி. ஆர் எல். எவ். அமைப்பு கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## எழுச்சி ஊர்வலம்

துன்னாலை மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் சனிக்கிழமை எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த எழுச்சி ஊர்வலம் காலை 7.00 மணிக்கு கலிகைச் சந்தியிலிருந்து செஞ்சிலுவைச்சங்க அலுவலகம் வரை நடத்தப்படும். (இ)

## சமுகமளிக்க கோரிக்கை

வலயம் இரண்டை சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்யும்—

பாடத்துறை சார்ந்த விசேட கல்விப் பணிப்பாளர்களையும் இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு வலயம் – 2 அலுவலகம் இயங்கும் திரு இருதயக் கல்லூரியில் சமுகம் அளிக்குமாறு வலயம்–இரண்டின் கல்விப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது.

## அதிபர் கூட்டம்

கல்வி வலயம் I இன் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டங்கள் நாளை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களுக்கு காலை 10 மணிக்கும், யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களுக்கு 11 மணிக்கும், சாவகச்சேரி கோட்டத்துக்கு பிற்பகல் 1-30 க்கும் கூட்டங்கள் நடைபெறும்.

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் —

சங்கானை கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை காலை 10 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவிருக்கின்றன. (இ-3-11)

## வலி. கிழக்கு வடபகுதி பல. நோ. கூ. சங்கம்

எமது ப. நோ. கூ. சங்கத்திற்குக் கீழ்க்கண்ட பொருள்கள் தேவையாக உள்ளன. இவற்றை வைத்திருப்போர் நேரடியாக சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. அவரி மேடைத்தராசு 250 K — 01
2. அலரி மேசைத்தராசு 15 K — 01
3. இரும்புப் பெட்டி — 01

பொதுமுகாமையாளர்

தற்காலிக முகவரி:
கனகம்புளியடிச்சந்தி.
சரசாலை.

(சி/3182)

## 90 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

### வீரவேங்கை தர்மினி

(சண்முகநாதன் சுகதினி)
(சித்திரமேழி, இளவாலை)

தாய் மடியில்; 24 – 05 – 1977

தாயகமண்ணில்: 30 – 10 – 1995

நாளை (26 - 01 - 1996) வெள்ளிக்கிழமை கீழ்க்காணும் தற்காலிக முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள். சகபோராளிகளைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சண்முகநாதன் (தந்தை)
குடும்பத்தினர்.

பொ. பெரியதம்பி,
இல: 419, 5ஆம் யுனிற்,
இராமநாதபுரம்.

(40451)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் கந்தப்பு (விசுவலிங்கம்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கிராமசபைத் தலைவர்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் கந்தப்பு 22-1–96இல் துணுக்காயில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், இறைவள், சிவா, வசந்தி, சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லலிதாராணி, ரஞ்சினி, கஜேந்திரன், விஜயராசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 1 - 96இல் துணுக்காயில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
நா. துரைசிங்கம்
(மைத்துனர்)

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

[40011]

### கந்தையா சற்குணராஜா

யாழ்ப்பாணம், ஆணைப்பந்தியைச் சேர்ந்த கந்தையா சற்குணராஜா (அப்பு அண்ணை) இந்தியாவில் 31 – 12 – 1995இல் காலமானார்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள். ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. சிவப்பிரகாசம்,
(மைத்துனர்)

முகவரி ''சந்திரோதயம்,''
கரவெட்டி மேற்கு.
கரவெட்டி.

(40008)

### வில்லியம் ஜோர்ஜ் கபிரியேற்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வில்லியம் ஜோர்ஜ் கபிரியேற்பிள்ளை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளை - மேரி யோசவினின் அன்பு மகனும், மேரி மாகிறேற்றின் அன்புக் கணவனும், வனஜா (நோர்வே), ஹரிஸ் (டென்மார்க்), ஜெனற் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மார்த்தா வைலற், விக்ரர் இம்மானுவேல், ஜெயரட்டினம், அருட் சகோதரிகள் மேரி பிறிஜிற் (இளவாலை தி. கு. க. ம), மரியறோசா (மிருசுவில் தி. கு. க. ம.), தனசிங்கம் (புலோலி) ஆகியோரின் சகோதரனும் அமலதாஸ், திருமதி செல்வி, றாஜன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25- 01- 1996) காலை 9-00 மணிக்கு வதிரி கரவெட்டியில் உள்ள திரு குலசிங்கம் வீட்டில் நடைபெறும் திருப்பலிக்குப்பின் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மாகிறேற் ஜோர்ஜ்
(மனைவி)

தற்போதையா முகவரி:-
திரு A. C. குலசிங்கம்,
வதிரி, கரவெட்டி.

(40010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்து வருவதால் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டு வருகிறது.

மருந்து எடுப்பதற்கு மக்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கும் நிலை இருந்து வருகிறது.

மேலும் கட்டில்கள் படுக்கை விரிப்புகள் போன்றவற்றுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் உள்ளக நோயாளர்கள் கட்டில்களுக்கு நடுவிலும் கொரிடோரிலும் படுகின்றனர்.

இதனால் காய்ச்சல், தீக்காய நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வைத்தியசாலை சுற்றாடலிலும் சுகாதாரச் சீர்கேடு காரணமாக துர்நாற்றம் வீசுகின்றது. (இ-76-10-ரி)

# இறால் பண்ணைக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு

## புத்தளத்தில் இருவர் காயம்

கொழும்பு, ஜன. 25

புத்தளம் பகுதியில் உள்ள ஆராச்சிகட்டு என்னுமிடத்தில் உள்ள வயரன்கட்டு கிராமத்தில் உள்ள தஸநாயக்கா இறால் பண்ணைக்குள் நள்ளிரவு வேளையில் பிரவேசித்த இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சம்பவத்தின் போது காவலில் இருந்த இருவர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது. இனந்தெரியாத கோஷ்டியினரைத் தேடி பொலீஸார் அப்பகுதியில் வலை விரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ராணுவத் தீர்வுக்கு முயன்றால்

# இன்னும் ஒரு தசாப்தம் கழிந்தாலும் அமைதிவராது

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 2൨

"இராணுவ பலத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. இராணுவத்தின் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண நினைத்தால் இன்னும் ஒரு தசாப்தம் கழிந்தாலும் ஐக்கியமும், சமாதானமும் வந்து விடப் போவதில்லை".

மட்டக்களப்பில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் தபால் தொடர்புத் துறை பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# அதிகார பரவலாக்கலை அமுல்செய்ய ஒத்துழைப்புக் கோருகிறார் அனுருத்த

கொழும்பு, ஜன. 25

அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை அமுல்படுத்த அனைவரும் உதவவேண்டும். நாட்டைப் பிரிப்பதற்கு முயற்சிக்கக்கூடாது.

இப்படிக் கூறியுள்ளார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை.

கம்பளையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதிகாரப்பரவலாக்கல் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிங்கள மக்கள், பௌத்த குருமார்கள், தமிழ் — முஸ்லிம் மக்களுக்கு நான் கூறும் அறிவுரை இதுவாகும். யுத்தத்தினால் பயங்கரவாதத்தை மட்டுமே ஒழிக்கமுடியும்.

அதிகாரப்பரவலாக்கலை முன்வைத்து ஏற்படுத்தப்படும் அரசியல் தீர்வு மூலமே இந்த நாட்டில் சமாதானத்தையும், மக்களின் நல்லெண்ணத்தையும் வென்றெடுக்க முடியும் என்பதை இந்த இனவாத சிந்தனையாளர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் — என்றார்.

# 8 ரூபா சம்பள உயர்வு கோரிக்கை: இ. தொ. கா. பின்வாங்காதாம்

## 3 மாத கால அவகாசம் கொடுக்கிறார் தொண்டா

கொழும்பு, ஜன. 25

தோட்டத் தொழிலாளர்களுக்கு எட்டு ரூபா நாளாந்த சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் இருந்து இ. தொ. கா. ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை. இக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு இ. தொ. கா. 3 மாத காலக்கெடுவை வழங்கத் தயாராக இருக்கிறது.

இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இக் காலக்கெடுவுக்குள் தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கக் கூடிய சம்பள உயர்வு திட்டம் ஒன்றை முன்வைக்க அரசு தவறினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றும் அவர் கூறினார்.

அதே சமயம் இ. தொ. கா. முன்வைத்துள்ள பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், அமைச்சர் தொண்டமனுக்கும் இடையில் கடந்த திங்களன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. (இ-3)

மட்டக்களப்பில்

# ஷெல் வீச்சுக்கு அஞ்சி மக்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஜன 25

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை காரணமாக மட்டக்களப்பு கொடுவாமடு கிராம மக்கள் ஷெல் வீச்சுக்கு அஞ்சி இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள சுமார் 400 குடும்பங்கள் வந்தாறுமூலை ப. நோ. கூ. சங்கத்தில் தங்கியுள்ளன என்றும்—

அவர்களுக்கு அந்த ஊர் மக்கள் சமைத்த உணவு வழங்குவதாகவும். —

3 தினங்களுக்கு உணவு வழங்க உலர் உணவுகளை அரச அதிபர் வழங்கியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

# அரச அதிபர் கொழும்பு பயணம்

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட ஹபரண கப்பலில் யாழ். அரசாங்க அதிபரும் கொழும்பு பயணமானார்.

அரசாங்க அதிபருடன் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட 12 பேர் இக்கப்பலில் பயணமாகினர்.

அரசியல் தீர்வு ஆவணம்:

# கரிசனையுடன் பரிசீலிக்க கோருகிறது கூட்டணி!

கொழும்பு, ஜன. 25

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகளில், சம்பந்தப்பட்ட சகல கட்சிகளும், குழுக்களும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசின் சட்ட ஆவணத்தை மிக கரிசனையுடன் பரிசீலனை செய்ய வேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தி கேட்டுள்ளது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அரசாங்கம் முன்வைத்த இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் அரசு வெளியிட்டுள்ள நகல் சட்ட ஆவணத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டணி தெரிவித்துள்ளது

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் மேற்கண்டவாறு முடிவு எடுத்தது.

# பளை கல்விக் கோட்ட ஆசிரியருக்கு

சாவகச்சேரி, ஜன. 25

பளை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் இம் மாத சம்பளக் காசோலைகளை இன்று வியாழன் காலை 10 மணிக்கு தத்தமது பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளுமாறு பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் கேட்டுள்ளார். (இ-3)

# அம்பாறையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஜன. 25

அம்பாறை பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி அங்குள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற சந்தேகத்தில் அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சோதனை நிலையங்களின் பாதுகாப்பும், முகாம்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

படையினரின் சோதனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

முகாம்களில் பாதுகாப்பு சுவர்கள் உயர்த்தப்பட்டு கூடுதல் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரத்தின் பாதுகாப்பு ஏற்கனவே பலப்படுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

25 — 01 — 1996

இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — தியாகராகங்கள்
- ★ 8-20 — நலந்தானா நிகழ்ச்சியில் "சிரங்குநோய்" பற்றிய குறிப்புகள்.
- ★ 8. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

26 — 01 — 1996

காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7. 02 — மாவீரர்வணக்கம்
- ★ 7-10 — உதயகீதங்கள்
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7. 45 அறிவிப்புக்கள்— தொடர்ந்து 8-00 மணி வரை [illegible]

# இடம் பெயர்ந்துள்ள சகலருக்கும் சவர்க்காரம்

தற்போது கிராம சேவையாளர்கள் மூலம் வழங்கப்படும் இலவச சவர்க்காரம் இடம்பெயர்ந்த சகல குடும்பங்களுக்கும் கிடைக்கக் கூடிய வகையில் விநியோகிக்கப்படும்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சவர்க்காரம் சகலருக்கும் கிடைக்கக் வசதியாக தேவை ஏற்படின் விநியோக கால எல்லை நீடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இவ்விநியோகம் எதிர்வரும் சனிக்கிழமை பூர்த்தியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-3)

# இப்படியும் நடக்கிறது!

சாவகச்சேரி, ஜன. 24

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதனால் ஒவ்வொரு வீட்டிலும் பல குடும்பங்கள் வசிக்கின்றன.

இதன் காரணமாக பல இடங்களில் நீரடைப்பு மலசல கூடங்களின் குழிகள் நிறைந்து விடுகின்றன.

இவ்வாறு நிரம்பிய குழிகளில் இருந்து கழிவுப் பொருள்களை உரிய முறைப்படி வெளியே எடுத்துப் புதைத்துத் துப்புரவு செய்யாமல் —

தங்கள் வளவுகளில் இடமிருந்தும், வீதிகளுக்குக் குறுக்கே வாய்க்கால் வெட்டி அயலில் உள்ள வளவுகளுக்குள் வழிந்தோட விடுகின்றனர்.

கழிவுப் பொருள்கள் வீதிகளில் ஊறி நின்று பெரும் சுகாதாரக்கேடு விளைவிக்கின்றன.

அந்த வீதிகளால் செல்லும் மக்கள் குறிப்பாக பாதசாரிகள் நோய் காவிகளாக மாறும் நிலை உண்டாகிறது.

இது ஒரு புறமிருக்க —

மலசல கூடக் கழிவுகள் கொண்ட கொள்கலன்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் இருந்தும் அசுத்தப் பொருள்கள் வீதியால் செல்லும் பயணிகள் மீது வீசப்படும் சம்பவங்களும் இடம் பெறுவதாகச சுட்டிக்காட்டப்படுகிறது.

கழிவுப் பொருள் கொள்கலன்களை ஏற்றிய வாகனம் ஒன்று, வேகமாக வந்து வீதியில் உள்ள பெரிய கிடங்கிற்குள் விழுந்தபோது—

கழிவு நீர் சிதறுண்டு வீதியால் சென்றவர்கள் மீது பட்டு அவர்களை அசுத்தப்படுத்தியது.

இம் மாதம் 18ஆம் திகதி காலை 10-45 மணியளவில் பெரிய அரசடிச் சந்தியில் இச் சம்பவத்தில் தானும் பாதிக்கப்பட்டதாக வாசகர் ஒருவர் குறைப்படுகிறார்.

மலசலகூடக் கழிவுகளை அகற்றி சுகாதாரத்தைப் பேணுவதில் யாழ். மாநகர சபையும், சாவகச்சேரி நகர சபையும் அக்கறை கொண்டு நற்பணி ஆற்றி வரும் வேளையில் —

ஊழியர்களின் ஏனோ தானோ போக்கினால் இத்தகைய சிரமங்களை — நோய் ஆபத்துக்களை— எதிர்நோக்கவேண்டி இருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

(அ-31)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உள்ளது. விவரம் நேரில் தொடர்பு: சி. கணபதிப் பிள்ளை, மே/பா சி. வல்லி புரம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை. (40096)

பஜாஜ் ஸ்கூட்டர், சிறிய ஜெனரேட்டர், ஸ்ரீறியோ றேடியோ, கியர் றலி சைக்கிள் ஆகியன விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: முத்தையா ஆசிரியர், பொன்னம்பலம் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (40237)

புதிய நுணுக்குச் காட்டி, படம் வரைதல் பலகை, அதற்குறிய 'T'முக்கோணம், 50 மீற்றர் அளக்கும் ரேப் றோல் விற்பனைக்குண்டு. தொடர்பு: நவம் மின் அகம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (40233)

1995ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், விஞ்ஞானம், தமிழ் (O/L) வினாக்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல 8, நவீன சந்தை, சாவகச்சேரி. (சி-2948)

பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. P. N. மில், கண்டி வீதி, சாவகச்சேரி. (40007)

புத்தம் புதிய நல்ல நிலையிலுள்ள Yamaha (Mate 90), சிவப்பு, சமீப காலத்தில் கொண்டுவரப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. உமாசங்கர், நெடியகாடு, வல்வெட்டித்துறை. (40091)

## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள ஆங்கில சுருக்கெழுத்தாளர் உடனடியாகத் தேவை. தாமாகவே கடிதங்கள் வரைந்து செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இல.522, மே/பா உதயன், சரசாலை தெற்கு. (40242)

## கைமாறிவிட்டது

23 – 1 – 96 அன்று மயில் வாகனம் ரஞ்சன் என்பவரின் விலையுயர்ந்த ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று சாவகச்சேரி சந்தையடியில் வானில் இருந்து கைமாறி விட்டது. எடுத்தவர்கள் கண்ணா உதிரிப்பாக விற்பனையாளர், சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [40005]

## போத்தல் தேவை

வெற்று ஹார்லிக்ஸ்/வீவா, ஜாம் போத்தல்களை வதனா களஞ்சியம் மிருசுவில், வேல் களஞ்சியம் எழுதுமட்டுவாள், தேன்சோலை மந்திகையில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட். (சி-3168)

## தவறிவிட்டது

மானிப்பாயைச் சேர்ந்த மறிச்சேட் மோகனதாஸ் ஆகிய எனது A/L, O/L. சான்றிதழ்களும், ஏனைய வடக்கு - கிழக்கு மாகாண சபை விளையாட்டுச் சான்றிதழ்களும், பிறப்புச் சான்றிதழ்களும் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தோர் கிளீன்கட் ஸ்தாபனம் சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். (39999)

இம்மனுவேல் எமெடியூஸ், 47, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் எனது குடும்ப அட்டை 11-01-96 அன்று சாவகச்சேரிக்கும், புத்தூர் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டச்சு றோட், சாவகச்சேரியில் அமைந்துள்ள குடும்ப அட்டைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். நன்றி. (40245)

## வியாபாரிகளுக்கு

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு மாடம் யாழ். வீதி, கிளிநொச்சி. [நீதிமன்றம் முன்பாக). [சி/3176]

## பத்திரிகை விநியோகிக்க ஆட்கள் தேவை

உருத்திரபுரம், ஜெயந்திநகர், திருநகர், கனகபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு காலையில் உதயன் பத்திரிகைகளைக் கொண்டுசென்று விநியோகிக்க ஆட்கள் உடன் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

உதயன் பணிமனை,
வை. எம். சி. ஏ. கட்டடம்.
கண்டி வீதி,
கிளிநொச்சி.

## தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

புதிய ஆண்டில் உங்கள் உயர்ச்சிக்கு பல வழிகளிலும் கை கொடுத்து உதவுகிறது தமிழீழ வைப்பகம்

★ நடைமுறைக் கணக்கு (மிக விரைவில்)
விவரங்களை அருகிலுள்ள தமிழீழ வைப்பக மேலாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
★ நிலையான வைப்புக்கள்
★ மாதவட்டி வைப்பு
★ 07 நாள் அறிவிப்பில் மீளும் வைப்பு
★ வெளி வரவு நிலையான வைப்பு
★ சிறுவர் தேட்டக் (சேமிப்புக்) கணக்குகள்
★ சாதாரண தேட்டக் கணக்கு
★ வெளிநாடுகளிலிருந்து பணம் பெறும் வாய்ப்பு

குறைந்த வட்டி வீதத்தில்
**அடகு கடன் சேவை**

★ வைப்புக்களுக்கு எதிரான கடன்கள்

மேலும் வாணிபக்கடன், உழவுக்கடன், மேம்பாட்டுக்கடன் போன்ற சகல வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள தமிழீழ வைப்பக மேலாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

"தமிழீழ வைப்பகம் தமிழரின் வைப்பகம்" [சி/3181]

## பிறந்த தின வாழ்த்து

**உயர்திரு சிதம்பரம் இராசலிங்கம்**
(ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள சேவையாளர், சமாதான நீதிவான்)

செல்வாபுரம் - பட்டிக்கடவை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர்திரு. சிதம்பரம் - இராசலிங்கம் அவர்கள் இன்று (25-1-1996) தனது 62 வது வயது தொடக்கத்தில், எங்கள் கிராமத்துக்கும், மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், கிராம மக்கள்.

தற்போதைய முகவரி:
காளி கோவிலடி,
தவசிகுளம், கொடிகாமம். (சி-3180)

## தேடப்படுகிறார்

மானிப்பாய் மேதஸ் ஒழுங்கையைச் சேர்ந்த
ராஜா வைத்தியசாலை டாக்டர் கனகேஸ்வரன்
அவர்களை
மானிப்பாயைச் சேந்த
றஞ்சிதா வைத்தியசாலை டாக்டர் வி. சிறீஸ்காந்தன்
தேடுகின்றார்.

றஞ்சிதா வைத்தியசாலை,
சின்னவின்சன் வீதி,
கமலாசினி ஒழுங்கை,
ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவிலடி,
சரசாலை தெற்கு. (40243)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கொடுப்பனவுகள் பற்றிய அறிவித்தல்

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள், ஊழியர்கள் பின்வரும் கொடுப்பனவுகளைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக அலுவலகத்தில் 1996 - 01 - 23 ஆம் திகதி தொடக்கம் 1996-01-30 ஆம் திகதி வரை (விடுமுறை தினங்கள் உட்பட)பெற்றுக் கொள்ளலாம்.

**மாணர்களுக்கான கொடுப்பனவுகள்:**

1. மகாபொல புலமைப்பரிசில்

(அ) யாழ். பல்கலைக் கழகத்தின் மகாபொல புலமைப்பரிசில் சான்றிதழ்களைப் பெற்றுக் காசோலைகளின் செல்லுபடிக் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக அவற்றை ஒப்படைத்த முதலாம் ஆண்டு மாணவர்கள் தமக்குரிய காசோலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) மகாபொல புலமைப்பரிசில் சான்றிதழ்களையும், காசோலையையும் இதுவரை பெற்றுக் கொள்ளத் தவறிய முதலாம் ஆண்டு மாணவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்

(இ) மருத்துவப்பீட மாணவர்களுக்கான 8 ஆம், 9 ஆம் தவணைப் பணத்தையும் ஏனைய மாணவர்களுக்கான 9 ஆம், 10 ஆம் தவணைப் பணத்தையும் பின்வரும் காலப்பகுதிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

| பீடம் | கொடுப்பனவுத் திகதி |
|---|---|
| மருத்துவம் 89, 90, 91, 92 ஆம் ஆண்டு மாணவர்கள் | 1996-01-23 — 1996-01-24 |
| விஞ்ஞானம் 90, 91, 92 ஆம் ஆண்டு மாணவர்கள் | 1996-01-23 — 1996-01 24 |
| கலை 90, 91, 92 ஆம் ஆண்டு மாணவர்கள் | 1996-01-25 — 1996-01-27 |

2. உதவிப்பணக் கொடுப்பனவு.

எமது முன்னைய அறிவித்தல்களுக்கமைய உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறிய கலைப் பீட மாணவர்கள் தமக்குரிய 7 ஆம், 8 ஆம் தவணைப் பணங்களையும், விஞ்ஞான, மருத்துவ பீட மாணவர்கள் 8 ஆம், 9 ஆம் தவணைப் பணங்களையும் பின்வரும் திகதிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

1996-01-28, 1996-01-29, 1996-01-30

**ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்:**

(அ) மார்கழி மாதத்திற்கான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) ஜனவரி மாதச் சம்பளம் 1996-01-25 ஆம் திகதியிலிருந்து 1996-01-30 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:

(1) மாணவர்கள் தமது பல்கலைக்கழக அடையாள அட்டைடையையும், உதவிப்பணப் பதிவுப் புத்தகத்தையும் ரூபா 5/- பெறுமதியான முத்திரையையும் கொண்டுவரல் வேண்டும்.

(2) வன்னிப்பகுதிகளில் உள்ள ஊழியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் வழங்கும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

பதிவாளர்.

(சி/3160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பின்னடிக்கும் ஜனாதிபதி

கடந்த நாற்பது வருடங்களாக நாட்டில் வேரூன்றியுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு சில வருடங்களுக்குள் அல்லது ஒரு சில மாதங்களுக்குள் முழுமையான தீர்வு காண முடியாது.

இவ்வாறு பின்னடிக்கும் தொனியில் பேசியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தாம் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை கண்டுவிடப் போவதாகக் கூறியே, பொதுத்தேர்தலிலும் சரி ஜனாதிபதித் தேர்தலிலும் சரி சந்திரிகா அரச ஆசனத்தில் ஏறினார்.

இனப் பிரச்சினை இந்த நாட்டின் நீண்ட காலப் பிரச்சினை. நாட்பட்ட புண் என்பது அவருக்கு அப்போது தெரியாமற் போய்விட்டதா?

இந்தப் பிரச்சினையைக் குறுகியகாலத்திற்குள் தீர்த்து வைக்க சிங்கள பௌத்த பேரினவாதம் அனுமதிக்காது என்பதனை அவரால் புரிந்து கொள்ள முடியாமற் போயிற்றா?

அந்தளவுக்கு அரசியல் பகுப்பாய்வுத் தன்மை இல்லாமலா இவர் அரசியல் தலைமைத்துவத்துக்குப் போட்டியிட்டார்?

இனப்பிரச்சினைக்கு முற்று முழுதான தீர்வைக் காண முடியாது என்பது சந்திரிகாவுக்கு இருபது மாதங்களுக்கு முன்னரே— மேல் மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவி வகித்த போதே—தெரியும்!

தம்மால் செய்ய முடியாததையும், செய்வதாகக் கூறி மக்களை ஏமாற்றி வாக்கு வாங்குவதே அரசியல்வாதிகளின் குணாம்சம். மக்களை ஏமாற்றத் தெரியாதவர்கள் அரசியல் வாதிகளாக முடியாது!

ஓர் அரசியல்வாதி என்று தம்மை நிரூபிக்கும் வகையில். செய்ய இயலாததை செய்ய முடியும் என்று கூறியே சந்திரிகாவும் ஆட்சிக் கட்டிலைப் பிடித்துக் கொண்டார்!

எப்படியோ, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமக்கு திறமையும் துணிவும் இல்லை என்பதனை அவர் இப்போது உணர்ந்திருக்க வேண்டும்!

தாம் சமர்பித்துள்ள தீர்வு யோசனைக்கு சிங்களத் தீவிரவாதிகளிடம் இருந்து கிடைக்கும் எதிர்ப்பைத் தம்மால் எதிர்கொள்ள முடியாது என்பதனையும் அவர் புரிந்திருக்க வேண்டும். அது வேறு.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் சந்திரிகாவுக்கு உண்மையான விருப்பம், உளப்பூர்வமான விருப்பம் இருந்திருப்பின், அவர் போரை — இராணுவத் தீர்வை — நாடியிருக்கமாட்டார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துவிட்டார்கள் என்று கூறிக்கொண்டு, தமிழ் மக்கள் மீது போர் தொடுத்திருக்கமாட்டார். அவர்களை அழித்தொழித்து, அல்லற்பட வைத்திருக்கமாட்டார்.

இனப்பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்று நினைத்திருந்தால் அரசியல் தீர்வைத் தேடும் தமது அப்போதைய முயற்சியைத் தொடர்ந்திருப்பார்.

அதனைக் கைவிட்ட போதே, அரசியல் தீர்வைக் காண்பது இவரால் இயலாத காரியம் என்பது வெளிப்பட்டு விட்டது.

அந்த உண்மையைத் தான் இப்போது மறைமுகமாக உணர்த்தியிருக்கிறார்!

---

வன்னிப்பகுதியில்

## செஞ்சிலுவைச்சங்க அலுவலகம் முழுமையாக இயங்க அனுமதி மறுப்பு

சாவகச்சேரி, ஜன 25

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வன்னி அலுவலகத்தை முழுமையாக அமைக்க அரசு அனுமதி வழங்க பின்னடிப்பதாக கூறப்படுகிறது.

வன்னிப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு பணியாற்ற கிளிநொச்சியில் நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைக்க எடுக்கப்பட்ட முடிவின் பேரில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசிடம் அனுமதி கோரியுள்ளதாகவும்—

இதற்கான அலுவலகத்தை முழுமையாக செயற்படுத்த தேவையான தொலைத் தொடர்பு சாதனங்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளது என்றும்—

அரசின் அனுமதி கிடைக்காத காரணத்தால் தற்போதுள்ள அலுவலகத்தை முழுமையாகச் செயற்படுத்த முடியாதுள்ளது என்றும்— அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது இந்த அமைப்பு சிறிய அலுவலகம் ஒன்றை அமைத்துச் செயற்படுவதாகவும் —

நடமாடும் வாகனம் மூலம் செயற்படுவதாகவும் —

அநுராதபுரத்தையே மையமாக கொண்டு இயங்குவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இந்த அமைப்பின் சேவையை வன்னியில் விஸ்தரிக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இந்து அதிபராக பதவியேற்பு

சாவகச்சேரி, ஜன.25

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக திரு.ஆர் மகேந்திரன் நேற்றுக் காலை யாழ். கல்வி வலயம் 1 இன் பணிப்பாளர் திரு.இ.சிவானந்தன் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார், (உ)

## கால்நடைகளை கட்டி வளர்க்கக் கோரிக்கை

மிருசுவில், ஜன. 25

கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறுசாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பொ. குகநாதன் கால்நடை வளர்ப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

விவசாயத்தை கால்நடைகள் அழிக்காவண்ணம் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்—

இது தொடர்பாக தங்கள் பகுதி கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறும் அவர் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக வளம்மிக்க விளை நிலத்தை விட்டு விவசாயிகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதன் காரணமாக மரக்கறி உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதுடன் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது

## விபத்து

கரணவாய் பிரதான வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்

மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவரான கரணவாய் தெற்கு மண்டானைச் சேர்ந்த பொன்னர் நவம் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15-173)

## பளை ஆஸ்பத்திரியில் அபிவிருத்தி வேலைகள்

வியாபாரிமூலை, ஜன. 25

பளை அரசினர் வைத்திய சாலையில் நோயாளர்களின் நன்மை கருதி அங்குள்ள குடிதண்ணீர் குழாய்கள் திருத்தி அமைக்கப்படுகின்றன.

பச்சிலைப்பள்ளி மற்றும் கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவுகளின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அதிகளவு பணம் இவ்வைத்தியசாலையின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபா செலவில் மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனை கூடம் அண்மையில் அமைக்கப்பட்டது.

வைத்தியசாலைத் தேவைக்கென அம்புலன்ஸ், நீர் இறைக்கும் இயந்திரம், குளிர் சாதனபெட்டி போன்றனவும் தருவிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெறப்பட்ட ஜெனறேற்றர் மூலம் வைத்தியசாலைக்கு தேவையான மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது.

வைத்தியகலாநிதி எஸ். அம்பிகைபாகன் தலைமையிலான வைத்தியர் குழு நோயாளருக்கு சேவை ஆற்றி வருகிறது. (இ-152)

## வடக்கு -,கிழக்கில் மட்டும் அன்றி தெற்கிலும் பயங்கரவாதம் உருவாகும்

### ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25

''நாட்டின் அபிவிருத்தி வேலைகளை அரசு மேற்கொள்ளாவிட்டால் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல தென் பகுதியிலும் பயங்கரவாதம் உருவாகிவிடும் என்பதை ஜனாதிபதியும். அமைச்சர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.''

இப்படி எச்சரிக்கிறார் ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

மாத்தளை மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நாட்டின் அபிவிருத்தி வேலைகள் இன்று முழுமையாக நிறுத் தப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகவும் பின்தங்கி உள்ளது.பதவிக்கு வந்துள்ள அரசாங்கம் இன்றுவரைஎந்தவொரு அபிவிருத்தித்திட்டத்தையும் மேற்கொள்ளாமல் இருந்து வருகிறது.

வடக்கு - கிழக்கு யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு தேர்தல் வாக்குறுதிகளை அரசு மூடி மறைத்து வருகிறது. அரசாங்கம் மேலும் நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்காமல் மக்களுக்கு உண்மை நிலையை விளக்கி அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவேண்டும்.

மக்கள் எம்மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளார்கள். 1983 இல் நான்கு லட்சம் பேர் எமது கட்சியில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். 1995 முடிவின்போது 15 லட்சம் பேர் புதிய அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளனர்.

இந்த நாட்டில் எந்தவொரு கட்சியின் துணையுமின்றி தனியாக போட்டியிட்டு வெற்றியீட்டக்கூடிய ஒரே கட்சி ஐ. தே. க. மட்டுமே என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர் —

இப்படி அவர் மேலும் கூறினார். [இ-3]

## எம்பிலிப்பிட்டிய படுகொலை வழக்கு: மேல்நீதிமன்றில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன 25

எம்பிலிப்பிட்டிய பாடசாலை சிறுவர்கள் படுகொலை பற்றிய வழக்கு விசாரணை இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

9 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட 80 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தாங்கள் நிரபராதிகள் எனத் தெரிவித்தனர்.

1989 ஆம், 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலய 11ஆம் ஆண்டு மாணவர்களின் வரவுப் புத்தகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் தயானந்த லொக்கு கலபதி, அவரின் புதல்வர் கிரந்த லொக்கு கலபதி, பிரிகேடியர் ரோகண பராக்கிரம லியனகே, மேஜர் விதான கமகே யாப்பா, கப்டன் கபேஸ் ஹினிகே, கப்டன் கருப்பிட்டிய வஜிர குமார சிங்க, கோப்ரல் சமரதுங்க ஆராய்ட்சி தயாரத்தின, சார்ஜன்ட் காரியவாசம் உப்புள் சந்திர, சிப்பாய் ஜக்சன் குமாரதுங்க ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## இணைந்து செயற்படும்

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தக ஸ்தாபனங்களை ஆரம்பித்திருக்கும் வர்த்தகர்கள் கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொண்டு அதனுடன் இணைந்து செயற்பட ஏற்பாடாகியுள்ளது.

இடம்பெயர்ந்து வந்துள்ள யாழ். மாவட்ட வர்த்தகர்கள் இந்தநடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட வர்தகத் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (இ-ரி)

## இடம்பெயர்ந்தோருக்கு புனர்வாழ்வுநிலையம் உதவி

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் 250 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இரண்டு லட்சத்து 26 ஆயிரத்து 930 ரூபா பெறுமதியான படுக்கை விரிப்புக்கள், துவாய்கள் மற்றும் துணிவகைகளையும் —

எவ். ஆர். ஜி. திட்டத்தின் கீழ் 69 ஆயிரத்து 240 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களையும் — வழங்கி உள்ளது.

மேலும் வடமராட்சியில் முகாம்கள் தவிர்ந்த வெளி இடங்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தமக்களுக்கும் சமையல் பாத்திரங்கள், படுக்கை விரிப்புக்கள், [illegible] கள், லாம்புகள் போன்ற பொருள்களையும் அது வழங்கியுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி மகளிர் இல்லத்தைச் சேர்ந்த 50 பிள்ளைகளுக்கும் நிவாரண பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வரணி இயற்றாலை நலநோன்பு நிலையம், விக்கினேஸ்வர வித்தியாலயம், ஞானசாரியார் வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகிய இடங்களிலும்—

கெற்பலி— பண்டிதர்குடியிருப்பு பகுதிகளிலும்— மேற்படி நிறுவனம் குழாய்கிணறுகளையும், குழாய்கள், பம் ஆகியவற்றையும்—

சாவகச்சேரி பிரதேசத்தில் இந்து மல்சல கூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளது. (இ-152)

## மரநிழலில் இயங்கும் ரிக்கற் கொடுக்கும் பிரிவு

### நோயாளர்கள் பெரும் அவதி

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வார்ட் ஆக மாற்றப்பட்டதால் வெளிநோயாளர் ரிக்கற் கொடுக்கும் பிரிவு வைத்தியசாலை முன்பாக உள்ள மரநிழலில் இயங்கி வருகிறது.

ரிக்கற்றுக்கள் பெறவரும் நோயாளர்கள் வெய்யிலில் நீண்டவரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வாங்குகள் போடப்படாததால் நோயாளர்கள் மணிக்கணக்கில்வரிசையில் நின்றே மருந்து பெறுகின்றனர். (இ-117)

## முதலுதவி பயிற்சி வகுப்பு

இன்பருட்டி சிக்கன கடனுதவிச்சங்க ஆதரவில் நடத்தப்படும் பாலர் பாடசாலையில் இன்று 25 ஆம் திகதி முதலுதவி பயிற்சி வகுப்பு நடைபெறும். (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் (1995 ஆம் ஆண்டு) கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அதி சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொடுத்து கல்லூரியை பெருமைப்படுத்தியதற்காக அதிபர், ஆசிரியர் களை கௌரவிப்பதோடு பெறுபேற்றைப்பெற்றுத் தந்த பின் வரும் மாணவர்களை வாழ்த்துவதில் பெருமையடை கிறேன்.

கணிதம்
★ த. உபேந்திரன் 3A, B
★ இ. மயூரன் 2A, 2B

வர்த்தகம்
● ஜெயசுதா 2A, 2B,
● கபிலஸ் A, 3B
● கு. பாலகுமாரி A, 2B, C

கலை
● நா. சசிகலா A, 2B, C
● சுகந்தி 3B C
● பொ. கௌரி 2B, 2C

✶ பொறியியல் 1 ● முகாமைத்துவம்

Dr. V. தியாகராஜா
(பழைய மாணவன்)

''மெடி எயிட்ஸ்''
கண்டி வீதி,
சாவகச்சேரி. (40247)

## மரண அறிவித்தல்கள்

### அபிரகாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை முத்தையா
(யாழ். பேராலய உபதேசியார்)

அ.பி.முத்தையா (உபதேசியார்) 29-11-95 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி லோனார் தம்பிமுத்து அவர்களின் அன்பு மகனும், அக்னேஸ் இசபெல்லா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருட்சகோதரி P. M. J. ஜெகநாதன், P. F. X. செல்வநாதன் (முன்னாள் உதவி முகாமையாளர், லங்கெம்), காலஞ்சென்ற P. V. விமலநாதன், காலஞ்சென்ற P. M. A. அமிர்தநாதன் (பொறியியலாளர்), திருமதி றொபேட் சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மேரி வெற்றினா (இராசமணி), திருமதி வசந்தினி, திரு M. M. C. றொபேட் (அருமை) ஆகியோரின் மாமனாரும், ஜெகந்தன், சுகந்தன், (யாழ். பற்றிக்ஸ் கல்லூரி), கீதாஞ்சலி (மாணவி யா/சென் சாள்ஸ்) அரவிந்தன், பிரணவன் (மாணவர்கள் யாழ். இந்து) கோபிகா, தனுகா, வேணுகா (மாணவியர், யா/பு. ஜோண். பொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சு. மரியம்மா, காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்ற திருமதி நோசம்மா, திரு அ. யோண்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்- முகாமையாளர் புனித வளன் அச்சகம்), திருமதி ம. இராசாத்தியம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை கண்ணுறும் குருக்கள் கன்னியர்கள், உறவினர்கள் அனைவரும் இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
P. F. X. செல்வநாதன் (மகன்)
தவசிகுளம்,
மிருசுவில். (40244)

### சபாபதிப்பிள்ளை பொன்னம்பலம்

கைதடி வடக்கைச் சேர்ந்த முன்னைநாள் வெலியாத்து உத்தியோகத்தரும், சாவகச்சேரி, மட்டுவில், கைதடி, தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க கைதடி காசாளருமாகிய சபாபதிப்பிள்ளை பொன்னம்பலம் 22 - 1 - 96 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், Dr. சண்முகரத்தினம் (அரசினர் மத்திய மருந்தகம், கைதடி), சண்முகதேவர், சண்முகானந்தன் (எழுதுநர், காணி / மாவட்ட பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி, சண்முகலிங்கம் (கணக்காளர் நல்லூர் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, இலங்காதேவி, கலாதேவி (ஆசிரியை, யா / கைதடி முத்துக்குமாரசாமி ம. வி), சிவநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்), சுபலதாசன், திலகவதி (ஆசிரியை கிளி / பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி நளினி கருணானந்தன் (நோர்வே), ஜெயமாலினி, ஜெயந்தினி, பரமானந்தம், றஜனி, கஜன், சயன், நவதர்ஷன், நிதிலா, சிவஸரகன், சிவாதரி, ரிஷிகேசன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 23 - 1 - 1996 இல் கைதடி வடக்கு ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
Dr. சண்முகரத்தினம்
(மகன்)
கைதடி வடக்கு,
கைதடி. (40246)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கிலுள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 25-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு

## நிவாரணப் பணிகள் குறித்து கொழும்பில் மாநாடுகள்

சாவகச்சேரி, ஜன. 25

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய நிவாரணப்பணிகள் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய இன்றும், நாளையும் கொழும்பில் இரு மாநாடுகள் நடைபெறவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் கூட்டும் மாநாடு இன்றும்—

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் தலைமையில் அத்தியாவசிய சேவைகள் இணைப்புக் குழுவின் மாதாந்த மாநாடு நாளையும் — நடைபெறவிருக்கின்றன.

இந்த மாநாடுகளில் பங்குபற்ற யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன், கிளிநொச்சி அரச அதிபர் திரு எஸ். தில்லைநடராசா ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர். (உ-3-123)

காணாமல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதனையும் அவதானித்ததாக ஹெலியின் விமானி அறிவிக்கவில்லை என பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைப் பிரிவு அறிவித்துள்ளது.

ஏவுகணைத் தாக்குதலைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஹெலிக்கொப்டர் கடலில் சற்று உயரமாகவே பறந்து சென்றதாவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது.
(உ-3-6-7)

'இ' அட்டை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப அங்கத்தவரின் பெயர்கள் பங்கீட்டு அட்டையில் இருந்தால்—

அந்தப் பெயர்கள் நீக்கப் பட்டதுமன்றி ''இ'' அட்டைகள் ''உ'' அட்டைகளாகவும் மாற்றப்பட்டன.

இந்த நடைமுறை குறித்து இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் அதிருப்தியும் கவலையும் தெரிவித்திருந்தனர்.

வெளிநாட்டில் உள்ளவர்களின் பெயர்களை நீக்குவதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் 'இ' அட்டையை 'உ' அட்டையாக மாற்றுவது அநியாயம், அக்கிரமம் என்று ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதுகுறித்து செயலக வட்டாரங்களின் கவனத்துக்கு கொண்டுவந்து இந்த நடைமுறை நிறுத்தப்படுமா என்று கேட்கப்பட்டது.

அப்போதே பங்கீட்டு அட்டை மீளாய்வில் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-3-7)

தமிழக ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டனர் என்றும்—

பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கியைக் காட்டி மீனவர்களைப் பிடித்துச் சென்றதாகவும்—

தாங்கள் மட்டும் ஒருவாறு தப்பி வந்ததாகவும்—

அந்த மீனவர்கள் தெரிவித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறன்று நாகபட்டினம் கடலிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் பலியானதும் மற்றும் மூன்று மீனவர்கள் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-7)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

கிளிநொச்சிப்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேணுதல், நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் ஆகியனகுறித்து பிரதேச செயலகங்களில் வாராந்தம் கூட்டங்களை நடத்த வேண்டும் எனவும் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (அ-123)

## அவசரக் கூட்டம்

### ''சாந்திகம்''

உளவளத் துணைநிலையம்,
15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிலையத்தைச் சார்ந்த சகல நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் (Council of Management), நிர்வாக உத்தியோகத்தரையும் (Administrative Officer), நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் (Trustees), எதிர்வரும் சனிக்கிழமை [27-1-96] காலை 10 மணிக்கு சாவகச்சேரி எம். ஓ. எச் அலுவலகத்திற்கு தவறாது சமூகம் தருமாறு நிர்வாகச் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார்.

(40099)

## சேவைநலம்பாராட்டு விழா

### உயர் திரு. அ. பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அதிபராக இருந்து இளைப்பாறிய உயர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டு முகமாக பழைய மாணவர் சங்கத்தினர் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 28 - 01 - 1996 ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் விழா ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளனர்.

இவ்விழாவிற்கு யாழ். இந்துக் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

நிர்வாகக்குழு
பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம். (சி/2952)

## மரண அறிவித்தல்கள்

### செ. கணேசலிங்கம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட (முன்னை நாள் களஞ்சியப் பொறுப்பாளர்) செல்லத்துரை கணேசலிங்கம் 24 - 01 - 1996 காலமானார். இவர் நித்தியானந்ததேவியின் அன்புக் கணவரும், மதனாவின் (ஆண்டு 10 வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மாவின் அன்பு மகனும், தர்மலிங்கம், சங்கரலிங்கம், இராசலிங்கம், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் புலோலி தெற்கில் இன்று 25 - 01 - 1996 நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி நி. கணேசலிங்கம்
(மனைவி)

385, K. K. S. ROAD,
யாழ்ப்பாணம்.
(40100)

மாரியந்திடல்,
புலோலி தெற்கு,
புலோலி.

### சின்னத்தம்பி சிற்றம்பலம்
(சித்தம்மான்)

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சி. சிற்றம்பலம் நேற்று [24-1-96] இரவு 9 மணி அளவில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், சி. செல்வரத்தினம் (இளைப்பாறிய மாவட்ட மேலதிகப் பதிவாளர்), சி. சுந்தரலிங்கம் (முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை கிளை), சி. தியாகலிங்கம் [மக்கள் வங்கி — கன்னாதிட்டிக் கிளை], திருமதி. க. பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-1-96) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நெல்லியடிச் சந்திக்கருகில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சுந்தரலிங்கம்
(மகன்)

கொடிகாமம் றோட்,
நெல்லியடி,
கரவெட்டி. (40249)